அனுப்புநர்,

திருமதி.ஜி.சரஸ்வதி,
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்,
திருப்பத்தூர் மாவட்டம்.

பெறுநர்,

1. மாவட்ட கல்வி அலுவலர்,
   திருப்பத்தூர் / வாணியம்பாடி
2. வட்டார கல்வி அலுவலர்,
   திருப்பத்தூர் /கந்திலி/நாட்றம்பள்ளி/
   ஜோலார்பேட்டை/ ஆலங்காயம் / மாதனூர்

ந.க.என்2/202/2022, நாள்: .08.2022

அய்யா,

**பொருள்:** சிறுபான்மையினர் நலம் - பள்ளிக்கல்வி - கிராமப்புரப் பள்ளிகளில் 3-ஆம் வகுப்பு முதல் 6 - ஆம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவியர்கள் கல்வி கற்பதில் இடை நிறுத்தம் செய்வதை தடுத்தல் - அம்மாணவிகள் தொடர்ந்து கல்வி பயிலும் என்ணத்தை ஊக்குவித்தல் - 2021-2022 ஆம் கல்வி ஆண்டின் 3 ஆம் வகுப்பு முதல் 6 ஆம் வகுப்பு வரையில் பயிலும் சிறுபான்மை சமுதாயத்தை சார்ந்த பெண் குழந்தைகள் எண்ணிக்கை விவரம் கோருதல் - தொடர்பாக.

**பார்வை:** 1.இயக்குநர், சிறுபான்மையினர் நலத்துறை அவர்களின் கடித எண்.ந.க.அ4/537/2020, நாள்: 23.05.2022
2.இவ்வலுவலக கடித எண்.ந.க.என்2/202/2022, நாள்: 30.05.2022

*********

பார்வையில் காணும் கடிதத்தில், சிறுபான்மையினர் சமுதாயத்தில் பெண் குழந்தைகள் தொடர் கல்வி கற்பதில் பல்வேறு சூழ்நிலைகள் காரணமாகவும், குடும்ப வறுமையின் காரணமாகவும், கல்விக்காக அவ்வப்போது தேவைப்படும் சிறு சிறு தேவைகளை கூட பூர்த்தி செய்ய இயலாத சூழ்நிலையில் அப்பெண் குழந்தைகளின் பெற்றோர் தங்களது குடும்ப வறுமையின் காரணமாக பெண் குழந்தைகளை அதிக அளவில் இடைநிறுத்தம் செய்து வருகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் கிராமப்புறங்களிலுள்ள சிறுபான்மைய சமுதாயத்தை சார்ந்த பெண் குழந்தைகளின் இடைநிறுத்தலை தவிர்த்து அப்பெண் குழந்தைகள் தொடர்ந்து பள்ளிக்கு செல்வதை ஊக்குவிக்கும் வகையில் கிராமப்புறங்களிலுள்ள அரசு, அரசு உதவிப் பெறும் மற்றும் பகுதியாக அரசு உதவிப் பெறும் பள்ளிகளில் 3 ஆம் வகுப்பு முதல் 6 ஆம் வகுப்பு வரையில் பயிலும் சிறுபான்மை சமுதாயத்தை சார்ந்த பெண் குழந்தைகள் கல்வி கற்பதில் இடைநிறுத்தம் செய்வதை தவிர்க்கவும், தொடர்ந்து பள்ளிக்கு செல்வதை ஊக்குவிக்கும் வகையில் 3 ஆம் வகுப்பு முதல் 5 வகுப்பு வரை பயிலும் மாணவி ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1000மும் கல்வி ஊக்குவிப்புத் தொகை வழங்கும் திட்டத்தை மிகப்பிற்டுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையைப் போன்றே சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் பயனாக கிராப்புற பள்ளிகளில் உள்ள அரசு, அரசு உதவிப் பெறும் மற்றும் பகுதியாக அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் சிறுபான்மையினர் மாணவியர்கள் கல்வி கற்றலில் இடைநிற்றலை கணிசமாக குறைக்கப் பெற்று அனைவரும் கல்விப்பயிலும் ஒரு சூழ்நிலை அரசால் உருவாக்கப்பட்டு சிறுபான்மையினர் மாணவியர்களை ஊக்கப்படுத்தி அவர்கள் தொடந்து கல்வி பயிலும் சூழ்நிலை உருவாக்கப்பட்டு வாழ்கையில் முன்னேற்றம் அடைய வழிவகை ஏற்படுத்தும்.

Scanned with OKEN Scanner

மேலும் சிறுபான்மையின பெண் குழந்தைகளின் பள்ளிப்படிப்பானது எந்தவொரு காரணங்களுக்காகவும், அதேபோன்று அப்பெண் குழந்தைகளின் ஏழை பெற்றோர்களின் பொருளாதார நிலை காரணமாகவும், இன்னபிற காரணங்களுக்காகவும் தடை ஏற்படாமல் இடையூறின்றி தொடர்ந்து கல்வி பயிலும் வகையில் கிராமப்புறங்களில் செயல்படும் அரசு அரசு உதவிப்பெறும் மற்றும் பகுதியாக அரசு உதவிப் பெறும் கல்வி நிலையங்களில் 2021-2022 ஆம் கல்வி ஆண்டில் பெற்றோர்/பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.100000/-க்குள் உள்ள 3 ஆம் வகுப்பு முதல் 6 ஆம் வகுப்பு வரையில் பயிலும் சிறுபான்மையின மாணவியர்களின் விவரங்களை சம்மந்தப்பட்ட தலைமை ஆசிரியர்களிடமிருந்து பெற்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து 12.08.2022-க்குள் இவ்வலுவலத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இது மிகவும் அவசரம்

தங்கள் நம்பிக்கையுள்ள,

இணைப்பு : படிவம்

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்,
திருப்பத்தூர் மாவட்டம்.

நகல்: தொடக்கக்கல்வி அலுவலர், திருப்பத்தூர்.

8/8/22

8/8/22

அனுப்பப்பட்டது
நாள்: 10.8.22

2021–22 ஆம் கல்வி ஆண்டில் கிராமப்புற பள்ளிகளில் பயிலும் பெற்றோர்/ பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.100000/–க்குள் உள்ள சிறுபான்மையினர் மாணவியர்களின் எண்ணிக்கை விவரம்

மாவட்டம்:

| வ. எண் | சிறுபான்மையினர் இனம் | 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை | | | 6 ஆம் வகுப்பு | | | நிக... மொத்... |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | அரசு பள்ளிகள் | அரசு உதவி பெறும் பள்ளிகள் | பகுதியாக அரசு உதவி பெறும் பள்ளிகள் | அரசு பள்ளிகள் | அரசு உதவி பெறும் பள்ளிகள் | பகுதியாக அரசு உதவி பெறும் பள்ளிகள் | |
| 1. | கிறித்துவர் | | | | | | | |
| 2. | முஸ்லீம் | | | | | | | |
| 3. | ஜெயின் | | | | | | | |
| 4. | சீக்கியர் | | | | | | | |
| 5. | புத்தமதத்தினர் | | | | | | | |
| | மொத்தம் | | | | | | | |

Scanned with OKEN Scanner